

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 13-12-2024


# வைக்கம் வீரருக்கு விழா 2

அன்றைய காங்கிரசு கமிட்டித் தலைவரான பெரியார், இராஜாஜிக்கு கடிதம் எழுதி வைத்து விட்டுத்தான் வைக்கம் சென்றார். 'நான் திரும்பி வரும் வரையில் கமிட்டி வேலைகளைப் பார்த்துக் கொள்ளவும்' என்று சொல்லி விட்டுத் தான் சென்றார். இராஜாஜியும் வழி அனுப்பி வைத்தார். கைது செய்யப்பட்ட பெரியார் சிறையில் சித்திரவதைக்கு உள்ளானதைக் கண்டு, 'தீரரைத் தமிழ்நாடு போற்றுகிறது' என்றும் இராஜாஜி அறிக்கை வெளியிட்டார். அவரது தியாகத்தை முதலில் பாராட்டிய இராஜாஜியே, பின்னர் கடுமையாகக் கண்டித்து அவரை தமிழ்நாட்டுக்குத் திரும்பி வரச் சொன்னார். ஆனால் பெரியார் அதனை ஏற்கவில்லை. இறுதி வரை உறுதியாகப் போராடினார். முடிவில் பேச்சுவார்த்தை நடக்கும் போது பெரியாரை கழட்டி விட்டார்கள். முழுப் பெருமையும் அவருக்கு போய்விடக் கூடாது என்பதில் சிலர் எச்சரிக்கையாக இருந்தார்கள். ஆனாலும் வைக்கம் வெற்றி விழா கூட்டத்தை பெரியார், நாகம்மையாரை வைத்தே கேரள சீர்திருத்தவாதிகள் நடத்தினார்கள்.

அப்போது என்ன நடந்தது என்பதை இதோ பெரியாரே சொல்கிறார்...

"திருவிதாங்கூர் ராணியோடு காந்தி பேசினார். அப்போது ராணி, 'நாங்கள் ரோடுகளைத் திறந்துவிட்டு விடுகிறோம். ஆனால், அதைத் திறந்து விட்டவுடன் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் கோயிலுக்குள் போக உரிமை வேண்டும் என்று கேட்டு ரகளை செய்தால் என்ன செய்வது? அதுதான் தயங்குகிறோம்' என்று கேட்டுள்ளார்.

உடனே, காந்தி, அரசாங்க விடுதியில் தங்கியிருந்த என்னை வந்து சந்தித்தார். ராணி சொன்னதைச் சொல்லி 'என்ன சொல்லுகிறாய்? இதை ஒப்புக் கொண்டு விடுவது நல்லது' என்றார். நான் சொன்னேன், "Public ரோடு திறந்து விடுவது சரி! ஆனால், அதை வைத்துக் கொண்டு கோயிலைத் திறந்து விடும்படி கேட்க மாட்டோம் என்று நாம் எப்படி உறுதியளிப்பது? கோயில் பிரவேசம் என்பது காங்கிரசின் இலட்சியமாக இல்லாவிட்டாலும் - எனது இலட்சியம் அதுதானே, கோயிலை எப்படி விட்டுக்கொடுக்க முடியும்? வேண்டுமானால் ராணிக்கு ஒரு வார்த்தை சொல்லுங்கள்; 'இப்போதைக்கு இது மாதிரி கிளர்ச்சி எதுவும் இருக்காது. கொஞ்ச நாள் அது பற்றி மக்களுக்கு விளங்கும்படி பிரச்சாரம் செய்து, கலவரத்திற்கு இடமிருக்காது என்று கண்டால்தான் கிளர்ச்சி ஆரம்பிக்கப்படும், என்று சொல்லுங்கள்' என்று நான் சொன்னேன்.

அதை, காந்தி ராணியிடம் சொன்னவுடன் ராணியார், 'ரோட்டில் யார் வேண்டுமானாலும் நடந்து செல்லலாம்' என்று உத்தரவு போட்டுப் பொது ரோடாக ஆக்கினார்கள்." என்று பெரியார் அவர்களே அன்று நடைபெற்ற நிகழ்வைச் சொல்லி இருக்கிறார்கள். அந்தளவுக்கு அந்தப் போராட்டத்தின் அனைத்துக் காலக்கட்டங்களிலும் தொடர்ந்து பங்களித்து வந்தவர்தான் பெரியார்.

**வைக்கம் போராட்டமானது இந்தியப் பொதுவெளியில் ஏற்படுத்திய தாக்கம் என்பது மிகப் பெரியது. இப்போராட்டத்துக்குப் பின்னர்தான் 1927ஆம் ஆண்டு மகத் போராட்டத்தை அண்ணல் அம்பேத்கர் அவர்கள் நடத்துகிறார்கள். தனக்கு வைக்கம் போராட்டம்தான் தூண்டுதலாக இருந்ததாக அம்பேத்கர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.**

**"தீண்டத்தகாத மக்கள் தங்களின் அணுகுமுறையை மாற்றிக்கொண்டு தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினர். இம்மாற்றம் 1920களில் தொடங்கியது.**

இந்தச் சமூக அமைப்புக்கு எதிராக, தீண்டத்தகாத மக்கள் எவ்வாறு கிளர்ந்தெழுந்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதற்கு ஒரு சிலவற்றை மட்டுமே குறிப்பிட முடியும். இதில் பொதுச் சாலையைப் பயன்படுத்தும் உரிமையைப் பெற எடுக்கப்பட்ட முயற்சி, மிகவும் குறிப்பிடத் தகுந்தது. இந்த ரீதியில் மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய ஒரு முயற்சி 1924 இல் திருவிதாங்கூர் மாநிலத்தில் தீண்டத்தகாத மக்கள் செய்ததாகும். அது, வைக்கம் என்ற ஊரில் உள்ள கோயிலுக்குச் செல்லும் வழியைப் பயன்படுத்திக் கொள்ளும் உரிமையாகும். கோயிலுக்குச் செல்லும் சாலை பொதுவான சாலையாகும். இதை அனைவரும் பயன்படுத்தக் கூடிய வகையில் அரசுதான் பராமரித்து வருகிறது.

ஆனால், சாலை, கோயில் கட்டிடத்திற்கு அருகில் இருப்பதால் தீண்டத்தகாத மக்கள் இதன் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இறுதியில் அங்கு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் விளைவாக கோயில் சுற்றுப்புறச் சுவர் விரிவாக்கப்பட்டு அந்தச் சாலை மாற்றியமைக்கப்பட்டது. எனவே, தீண்டத்தகாத மக்கள் பயன்படுத்தினாலும் அது கோயிலை மாசுபடுத்தாத தூரத்தில் இருக்கும்படி பார்த்துக் கொள்ளப்பட்டது." (டாக்டர் அம்பேத்கர் ஆங்கில நூல் தொகுதி 5, பக். 247) என்று அம்பேத்கர் சொல்லி இருக்கிறார்கள். வட மாநிலங்களில் இது போன்ற போராட்டங்கள் தொடங்கியது.

**தென் மாநிலங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கமும் பல்வேறு கோவில் நுழைவுப் போராட்டங்களை நடத்தவும் வைக்கம்தான் தூண்டுதலாக இருந்தது. ஒவ்வொரு கோவில் அறங்காவலர்களிடமும் சுயமரியாதை இயக்கத்தவர்கள் தனித்தனியாக மனு கொடுத்தார்கள். இவை அனைத்தும் இணைந்துதான் 'யாருக்கும் தடையில்லை' என்ற சட்டமாக வந்தது. கோவிலுக்குள் நுழைவது மட்டுமல்ல, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற நிலையை திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உருவாக்கிக் காட்டி விட்டார்கள்.**

1926 ஆம் ஆண்டு திருவல்லிக்கேணியில் பேசிய பெரியார், "என்னோடு வாருங்கள்! பஞ்சமர்களுக்கு சாப்பாடு தரப்பட மாட்டாது, சூத்திரர்கள் தண்ணீர் மொள்ளக் கூடாது என்ற போர்டுகளைக் காட்டுகிறேன்" என்று சொல்லி இருக்கிறார். இவை எல்லாம் நொறுக்கப்பட்டு இருப்பதுதான் திராவிட இயக்கத்தின் சாதனையாகும்.

**ஒரு சீர்திருத்த இயக்கம் ஆட்சியைக் கைப்பற்றியதைத்தான் ஆதிக்க சக்திகளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பல்வேறு அவதாரங்களை எடுத்து வீழ்த்தப் பார்க்கிறார்கள். பலராலும் முடியாததை முடித்துக் காட்டிய திராவிட இயக்கத்தை இனி வெல்ல யாரும் இல்லை!**

**வைக்கம் வீரர் வாழ்க! வையகம் சிறக்கட்டும்! மானுடம் வெல்லட்டும்!**



"வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"–வில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (11.12.2024) கேரள மாநிலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற

# எழுத்தாளர் தேவநூர மஹாதேவாவுக்கு "வைக்கம் விருது"!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வைக்கம் நூற்றாண்டு விழாவில் வழங்கினார்!

**சென்னை, டிச.13-**

**"2024-ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருது" கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த தேவநூர மஹாதேவா அவர்களுக்கு வழங்கப்பட்டது.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சட்டமன்றப் பேரவையில், கடந்த 30.03.2023 அன்று எல்லை கடந்து சென்று சமூக நீதிக்காக வைக்கத்தில் போராடிய தந்தை பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் "வைக்கம் விருது" சமூகநீதி நாளான செப்டம்பர் 17ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி 110இன்கீழ் அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, 2024ஆம் ஆண்டிற்கான "வைக்கம் விருது" கர்நாடக மாநிலம்,



மைசூரு மாவட்டத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர் தேவநூர மஹாதேவா அவர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தேவநூர மஹாதேவா அவர்கள் ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர் ஆவார். மக்களின் மொழியியல் உரிமைகளின் மீதான நிலைப்பாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். மேலும், சாதி அடிப்படையிலான பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகச் செயல்பட்டவர். இவர் ஒன்றிய அரசின் உயரிய விருதான பத்ம ஸ்ரீ மற்றும் சாகித்ய அகாதெமி விருது போன்ற பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

வைக்கம் விருதிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தேவநூர மஹாதேவா அவர்களுக்கு ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் தங்க முலாம் பூசிய பதக்கம் ஆகியவை தமிழ்நாடு அரசின் அறிவிப்பிற்கிணங்க முதலமைச்சர் அவர்களால் கேரள மாநிலம் வைக்கத்தில் நேற்று (12/12/2024) நடைபெற்ற வைக்கம் நினைவகம் திறப்புவிழா நிகழ்ச்சியில் வழங்கப்பட்டது.

### மதுரை மாவட்ட மக்களைப் பாதுகாத்திட

# டங்ஸ்டன் சுரங்க அனுமதியை ரத்து செய்க!

## மக்களவையில் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்!

**புதுடெல்லி, டிச. 13-**

**"மதுரை மாவட்டம் அரிட்டாபட்டி பகுதியிலுள்ள மக்களை பாதுகாத்திட டங்ஸ்டன் சுரங்க அனுமதியை ரத்து செய்ய வேண்டும்" என்று மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் வலியுறுத்தினார்.**

மதுரை மாவட்டத்தில் டங்ஸ்டன் சுரங்கப் பிரச்சினை தொடர்பாக மக்களவையில் கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசியதாவது:

**ஒன்றிய அரசுக்கு முதல்வர் கடிதம்!**

"தமிழ்நாட்டின் மதுரை மாவட்டத்தில் ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத் திற்கு டங்ஸ்டன் சுரங்க உரிமம் வழங்க ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளதை சபையின்



கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இப்பிரச்சினை சுற்றுச்சூழல், கலாச்சார, சமூக மற்றும் கூட்டாட்சி போன்ற பல்வேறு விதமான தாக்கங்களைக் கொண்டுள்ளதனால் அப்பகுதியையும் அதன் மக்களையும் பாதுகாக்க உடனடி தலையீடு தேவைப்படுகிறது.

ஒன்றிய அரசு சுரங்க உரிமம் வழங்குவதற்கு முன் மாநில அரசிடம் கருத்து கேட்காததனால் தமிழக அரசு இத்திட்டத்திற்கு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இந்த உரிமத்தை ரத்து செய்யக் கோரியும், வள மேலாண்மையில் மாநில அரசின் ஒப்புதல் தேவை என்பதை வலியுறுத்தியும் டிசம்பர் 9-ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், அப்பகுதியில் இந்த திட்டத்தை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்று வருவதால், இந்த திட்டத்தை விரைவில் நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

**விவசாயிகள் பாதிப்பு!**

இது ஒரு மிக முக்கிய மான பல்லுயிர் பாதுகாக்கப்பட்ட இடமாகும், மேலும் இந்த பகுதியில் சமண நினைவுச் சின்னங்கள் மற்றும் தமிழின் முதல் கல்வெட்டுகளில் ஒன்று காணப்படுகிறதனால் இது கலாச்சார ரீதியாக மிக முக்கியமான பகுதியாக இருக்கிறது. எனவே, இதை நிறுத்தாவிட்டால் இவ்வனைத்தும் பாதிக்கப்படும்.

இந்த சுரங்கத் தளங்களில் இருந்து வெளியேறும் கசிவுகள் விவசாய உற்பத்தியையும் விவசாயிகளையும் பாதித்துள்ளதால் பல நாடுகள் இதை நிறுத்தியுள்ளன. எனவே, இதை நாம் நிறுத்த வேண்டும். இந்த சுரங்க திட்டத்திற்கு தி.மு.க. தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் பேசினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா – பாரத

# சாரண, சாரணியர் இயக்க வைரவிழாவிற்கு ரூ.39 கோடி நிதி ஒதுக்கீடு!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

***சென்னை, டிச. 13-***

***"முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - பாரத சாரண சாரணியர் இயக்க வைர விழாவுக்கு ரூ.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.***

*இது குறித்து அரசாணை வருமாறு:*

*பாரத சாரண சாரணிய கொண்டாட்டம் இயக்கத்தின் பொன்விழா 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடைபெற்றது. அப்போதைய முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இவ்வாண்டு பாரத சாரண சாரணிய இயக்கத்தின் வைர விழா ஆண்டாகும், இதனை யொட்டி தேசிய அளவிலான முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு வைரவிழா ஜாம்போரி (Diamond Jubilee National Jamboree) ரூ.10 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும்."*

*பாரத சாரண சாரணியர் இயக்க, தேசியத் தலைமையகம் "BSG வைர விழா பெருந்திரளணி" (Diamond Jubilee National Jamboree) நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு, அப்பெருந்திரளணியினை தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கம் தொகுத்து வழங்கிட தேசிய தலைமையகத்திலிருந்து கடிதம் பெறப்பட்டது என்றும், தேசிய தலைமையகமே அப்பெருந்திரளணியின் எண்ணிக்கை ஒதுக்கீடு மற்றும் முகாமில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள், அட்டவணை ஆகியவற்றை தேசிய தலைமையக பொறுப்பாளர்கள் மற்றும் குழுக் கொண்டு திட்டமிடும் என்றும் அப்பெருந்திரளணி ஏழு நாட்கள் நடைபெற உள்ளதால், தேசிய அளவில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் சுமார் 25,000 சாரண, சாரணியர்கள், திரிசாரண, திரி சாரணியர்கள், சாரண சாரணிய ஆசிரியர்கள் மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.*

*இப்பெருந்திரளணி செயல்பாடுகளை மாநிலத் தலைமை*



*யகம், பாரத சாரண சாரணியர், தமிழ்நாடு அக்டோபர் முதல் ஜனவரி வரை உள்ள காலத்தில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் சிறப்பாக நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது." என்றும், பாரத சாரண சாரணியர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு 75 ஆண்டுகள் முடிவடைவதை முன்னிட்டு வைரவிழா தேசிய திரளணியாகவும், (Diamond Jubilee National Jamboree), முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழா நடைபெறவுள்ளது என்றும், இவ்விழாவில் தினசரி நிகழ்வுகளாகவும், போட்டிகளாகவும், முகாம் கலை, மாநில நுழைவாயில், சாரண சாரணிய திறன்கள். ஆக்கக்கலைத் திட்டம், ரங்கோலி, அணி வகுப்பு, இசைக்குழு அணி வகுப்பு, வண்ணமிகு அணிவகுப்பு, உடல்திறன் வெளிப்பாடு. நாட்டுப்புற நடனம், திறன்வெளிப்பாடு, அணிகூட்டம், பாடித் தீ, உலகளாவிய கிராமம், இளைஞர் மன்றம்.*

*உணவுத் திருவிழா, ஒருமைப்பாட்டு விளையாட்டு, பல்வண்ண ஒப்பனை பேரணி, வேடிக்கை செயல்பாடுகள், வீரதீர செயல்பாடுகள், அறிவு சார் செயல்பாடுகள், இரவு நடைபயணம், மிதிவண்டி பயணம், இராணுவம், விமானப்படை மற்றும் காவல் துறை சாகச நிகழ்சிசிகள் நடைபெறும்.*

*மாநிலச் செயலாளர் மற்றும் சிறப்பு அலுவலர் பாரத சாரண சாரணியர் இயக்கம் அவர்களின் கடிதத்தில், தேசிய அளவில் அனைத்து மாநிலங்களிலிருந்தும் சுமார் 25,000 சாரண, சாரணியர்கள், திரிசாரண. திரி சாரணியர்கள், சாரண சாரணிய ஆசிரியர்கள் மாநிலப் பொறுப்பாளர்கள் மற்றும் மாநில அளவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் பல நாடுகளிலிருந்து சாரண சாரணியர் மாணவர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என்றும், இவ்விழாவினை சிறப்பாக நடைபெற செய்வதற்கு அதிக நிதி தேவைப்படும் நிலை உள்ளதால் உத்தேச செலவு திட்ட மதிப்பீடு ரூ.39,07,75,000/- (ரூபாய் முப்பத்து ஒன்பது கோடியே ஏழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம்) மட்டும் அனுமதித்து அதற்கான ஒப்புதல் வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா (Diamond Jubilee National Jamboree) மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு விழா நடத்திட ரூ.39,07,75,000/- (ரூபாய் முப்பத்தி ஒன்பது கோடியே ஏழு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் என முடிவு செய்துள்ளது.*

*இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.*